கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்களினைக் கோருதல்.

1. கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் நிறைவேற்றுத்தர சேவைத் தொகுதியின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகைமையினைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அது தொடர்பில் தங்களின் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் அனுபவத்துடனான சுய விபரத் தகவல்களினை உள்ளடக்கிய விண்ணப்பமொன்றினை பதிவுத் தபாலில், கிராமிய, அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு, 1 வது மாடி, கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பங்களினைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2026 திசம்பர் மாதம் 15 ஆந் திகதியாகும்.
குறிப்பு :- விண்ணப்பத்தினைப் பதிவுத் தபால் மூலம் அனுப்புவது கட்டாயமாகும் என்பதுடன், அது தபாலில் தொலைந்துவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்பது குறித்த முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட மாட்டாது. இறுதித் திகதிவரை விண்ணப்பத்தினைத் தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய இழப்புக்களினை விண்ணப்பதாரரே பொறுப்பேற்றல் வேண்டும்.

2. இதில் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 01 ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அமைச்சின் செயலாளர் அவர்களினால் தீர்மானிக்கப்படும்.

3. சேவை நிபந்தனைகள்

3.1 சேவைத் தொகுதி - நிறைவேற்றுத் தரம்

3.2 இப்பதவி ஒப்பந்த அடிப்படையிலானது என்பதுடன், மாதாந்தம் ரூபா. 133,570.00 கொடுப்பனவு, அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு மற்றும் தொலைபேசிக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

3.3 இந் நியமனம், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2310/29 என்ற இலக்க நடைமுறை விதிகளுக்கு உட்பட்டதாகும்.

3.4 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும்,திணைக்களக் கட்டளைகளுக்கும் அவ்வப்போது அரசாங்கத்தினால் வெளியிடப்படும் பிற ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

4. தேவையான தகைமைகள்

I. கல்வி/தொழில்முறைத் தகைமைகள்

உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராகச் சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

II. அனுபவம்

உச்சநீதிமன்ற வழக்கறிஞராகச் சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர் வழக்கறிஞராக ஆறு (06) ஆண்டுகளுக்குக் குறையாது செயலூக்கமான அனுபவமொன்றினைப் பெற்றிருத்தல், (செயலூக்கமான தொழில் அனுபவத்தினை உறுதிப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெறப்பட்ட

காலப்பகுதி, சான்றளிப்பவரின் இறப்பர் முத்திரை மற்றும் சான்றளித்த திகதி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)

குறிப்பு- அடிப்படைத் தகைமைகளினை சான்றுபடுத்தும் ஆவணங்களினை விண்ணப்பதாரரே உறுதிப்படுத்தி பிரதிகளினை விண்ணப்பப் படிவத்துடன் இணைக்க வேண்டும். சேவைக் காலப்பகுதி ஆரம்பமாகும் திகதி மற்றும் முடிவுறும் திகதியினைத் தெளிவாகக் குறிப்பிடும் சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

உடற் தகுதி

ஒவ்வொரு விண்ணப்பதாரரும், இலங்கையின் வேண்டிய எப் பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளினைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. பிற தகைமைகள்

- இலங்கைப் பிரஜையொருவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் தினத்தன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளினையும் எல்லா வகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. ஒப்பந்த விதி முறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்

i. சேவையில் அமர்த்தப்படுபவர்கள், அரசாங்கத்தின் ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும்.
ii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களம்சார் பிற கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.
iii. கோரும் மொழி ஊடகத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாங்கள் நியமனத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமையினைப் பெற்ற மொழி, தாங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டிய மொழியாகும்.

6**. வயது வரையறை**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 62 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

7. ஆட்சேர்ப்பு முறைமை

இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தரொருவரின் தலைமையின் கீழ் சட்டத்துறையின் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர் மற்றும் நாடளாவிய சேவையினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களினைக் கொண்ட 3 அங்கத்தவர்களுடன் நேர்முகப் பரீட்சை சபையொன்றினூடாக மேற்கொள்ளப்படும் தகுதிகாண் மதிப்பீட்டின் வாயிலாக விண்ணப்பதாரர்களுக்கிடையே அதி கூடிய புள்ளிகளினைப் பெற்ற விண்ணப்பதாரர் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஒரு வருட காலப்பகுதிக்கு சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

8. தகுதிகாண் மதிப்பீட்டின் நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளி வழங்கும் முறைமை பின்பற்றப்படும்.

தொடர் இல.	விடயம்	புள்ளிகள்	ஆகக்கூடிய புள்ளிகள்
01	மேலதிகமான கல்வித் தகைமைகள் அ.) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட சட்டம் தொடர்பிலான பட்டம். ஆ.) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட சட்டம் தொடர்பிலான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி	25 20	25

<table>
<tr><td></td><td>நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பட்டப்பின் படிப்பு சட்டம் தொடர்பிலான டிப்ளோமா.

இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட
• முதலாம் வகுப்பு கௌரவத்துடன்கூடிய சட்ட இளங்கலைப் பட்டம்.
• இரண்டாம் வகுப்பு உயர் கௌரவத்துடன்கூடிய சட்ட இளங்கலைப் பட்டம்.
• வகுப்பு தேர்ச்சி பெற்ற நிலையில் சட்ட இளங்கலைப் பட்டம்.
• சாதாரண தேர்ச்சியுடன் கூடிய சட்ட இளங்கலைப் பட்டம்

ஈ.) சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் முதலாம் வகுப்பில் தேர்ச்சி.
சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி
குறிப்பு I சட்டக் கல்லூரியின் இறுதித் தேர்வில் சிறப்புத் தகுதியுடன் (Honours) தேர்ச்சிபெற்றிருப்பின் மாத்திரமே மேற்கூறிய 05 புள்ளிகள் வழங்கப்படும்.
குறிப்பு II மிக உயர்ந்த தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.</td><td>15
10
07
05

10
05</td><td></td></tr>
<tr><td>02</td><td>மேலதிகமான அனுபவம்
வழக்குத் தொடர்பிலான ஆவணங்களினைத் தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் விடயங்களினை முன்வைத்தல்.
<table>
<tr><th></th><th>வழக்குகளினைத் தாக்கல் செய்தல் (வழக்கு ஒன்றுக்கு)</th><th>நீதி மன்றத்தின் முன் ஆஜராகி வாதங்களினை முன்வைப்பதற்கான புள்ளிகள் (வழக்கு ஒன்றுக்கு)</th></tr>
<tr><td>உச்ச நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றங்கள்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>நீதிபதி</td><td>2</td><td>3</td></tr>
</table>
குறிப்பு-
மேற்குறிப்பிட்ட தகைமைகளினை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய நீதிமன்றத் தீர்ப்புக்களின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு நடைபெற்ற தினத்தின் வழக்கு ஆவணத்தின் பிரதியொன்றினை நேர்முகப் பரீட்சைக்கு முன்வைத்தல் வேண்டும்.</td><td></td><td>35</td></tr>
<tr><td>03.</td><td>தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பச் சட்டம் குறித்த அறிவு.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், தகவல் தொழில்நுட்பம் அல்லது கணனி அறிவியலினை முதன்மையான பாடமாகப் பயின்று பட்டம் பெற்றிருத்தல்.

ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியிலிருந்து அல்லது பிற அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைத் தொழில் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டம் தொடர்பிலான டிப்ளோமா.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணனி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பம்</td><td>10

08

05</td><td>10</td></tr>
</table>

	தொடர்பிலான டிப்ளோமா அல்லது பிற நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட கணனி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பிலான NVQ 5 அல்லது அதனிலும் கூடிய டிப்ளோமாவொன்று. (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது சட்டக் கல்லூரியில் அல்லது பிற அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைத் தொழில் நிறுவனமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டத் துறையில் பாடநெறிகளினைத் தொடர்ந்து/பயிற்சி வேலைத்திட்டங்களில் பங்கேற்று பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள் (சான்றிதழொன்றுக்கு 02 புள்ளிகள் என்றவாறு ஆகக்கூடியது இரண்டு சான்றிதழ்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும்.) குறிப்பு - ஆகக்கூடிய தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.	04	
04	மொழித் திறன் (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொகன்றிலிருந்து ஆங்கில மொழியினை முதன்மையான பாடமொன்றாக உள்ளடக்கி பெற்றுக் கொண்ட பட்டம், (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய அளவில் முன்மாதிரியான நீதிமன்றப் போட்டிகளில் (Moot court competitions) காட்டியுள்ள ஆங்கில மொழியில் புலமை. <u>தனியாக</u> முதலிடம்/சிறந்த திறன் - 12 இரண்டாவது இடம் - 10 மூன்றாவது இடம்/பிற திறன்கள் - 08 <u>குழுக்களாக</u> முதலிடம்/சிறந்த திறன் - 10 இரண்டாவது இடம் - 08 மூன்றாவது இடம்/பிற திறன்கள் - 06 (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுக் கொண்ட டிப்ளோமாவொன்று அல்லது பிற நிறுவனமொன்றிலிருந்து ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுக் கொண்ட SLQF 3 அல்லது உயர் மட்ட டிப்ளோமாவொன்று அல்லது அரசின் நிறுவனமொன்றிலிருந்து ஆகக்குறைந்த வகையில் 1500 மணிநேர பாடநெறியினைத் தொடர்ந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி தொடர்பிலான டிப்ளோமாவொன்று. (ஈ) கல்விப் பொது தராதர (உயர்தர)) பரீட்சையில் (உள்ளூர் அல்லது இலண்டன்) ஆங்கில மொழி தொடர்பில் ஆகக் குறைந்தது அதி விசேட சித்தியினைப் பெற்றிருத்தல் அல்லது ILETS மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதனிலும் கூட, TOEFL-IBT 79 அல்லது அதனிலும் கூட TOEFL-CBT 213 அல்லது அதனிலும் கூட அல்லது TOEFL-PBT 550 அல்லது அதனிலும் கூட. (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுக் கொண்ட உயர் சான்றிதழ் அல்லது பிற நிறுவனமொன்றிலிருந்து ஆங்கில மொழி தொடர்பில் பெற்றுக் கொண்ட SLQF 2 மட்டத்தின் சான்றிதழொன்று குறிப்பு - ஆகக்கூடிய தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.	15 12 10 08 05	15

05	நேர்முகப் பரீட்சையின்போது காட்டும் திறமை. பதவியின் பொறுப்புக்களினை நிறைவேற்றுவதற்குத் தகுதியான விண்ணப்பதாரரின் ○ பலங்கள் ○ சூழ்நிலைகளுக்கேற்ப முடிவுகளினை எடுக்கும் திறன் ○ கெட்டித்தனம் மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு நோக்காகக் கொண்ட வினாக்களுக்கு வழங்கும் விடைகளின் பிரகாரம் புள்ளிகள் வழங்கப்படும்.		15
06.	மொத்தம்		100

9. விண்ணப்பதாரர்களின் அடையாளம்

அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களினை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையில் சகல சான்றுபடுத்தப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் விண்ணப்பதாரரினால் சரியாக சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளினை சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தங்களின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. ஆட்களினைப் பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

10. விண்ணப்பங்களினைச் சமர்ப்பிக்க வேண்டிய முறைமை

I. சமர்ப்பிக்கப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவமொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள், அவர்களின் விண்ணப்பங்களினை A4 அளவிலான தாளொன்றில் தயாரித்து முதலாவது பக்கத்தில் 01 தொடக்கம் 3.4 வரையிலும் இரண்டாவது பக்கத்தில் 3.5 தொடக்கம் 8.00 வரையிலும், மூன்றாவது பக்கத்தில் 9.00 தொடக்கம் 11.0 வரையிலான பக்கங்களும் வரக்கூடிய முறையில் தயாரித்து தங்களின் கையெழுத்துப் பிரதியில் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

II. விண்ணப்பப் படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை, அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/வழக்கறிஞர்/பொது நோட்டரி/முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது ரூபா. 47,615/- அல்லது அதனிலும் கூடிய மாதாந்தம் திரட்டிய சம்பளத்தினைப் பெறும் அரசாங்க அல்லது மாகாகண அரச சேவையின் நிரந்தரப் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தரொரிவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.
III. இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிப் படிவத்தின் வடிவத்திற்கு இணங்காத விண்ணபங்கள், எவ்வித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

11. பொய்யான தகவல்களினைச் சமர்ப்பித்தல்.

தங்களினால் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானதோ அல்லது தவறானதோ என்று கண்டறியப்பட்டால் தங்களின் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவலொன்று ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் வெளிக்கொணரப்படின் தொடர்புடைய நடைமுறைகளுக்கிணங்க பணியினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. வெற்றிடத்தினை நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ எனக்கு உரிமையுண்டு.

13. இவ்வறிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது வேறுபாடு ஏற்படும்வேளையில் சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

14. இவ் அறிவிப்பில் குறிப்பிடப்படாத விடயம் தொடர்பில் அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செயற்பாட்டின்போது ஏதேனும் சிக்கலான சூழல் எழும்வேளையில், அது தொடர்பில் என்னால் எடுக்கப்படும் முடிவே இறுதியானதாக இருக்கும்.

செயலாளர்,

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு.